**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-06012021-4169

Volume: 6

Issue: 1

Month: July

Year: 2021

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 05.05.2021

Accepted: 02.06.2021

Published: 01.07.2021

Citation:
Jeyasankar, Sivagnanam. "Queen Aadahasounthary with Three Breasts or the Third Breast Identified with Personalities." *Shanlax International Journal of Tamil Research,* vol. 6, no. 1, 2021, pp. 107–115.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i1.4169

*Corresponding Author:
sjeyasankar@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Queen Aadahasounthary with Three Breasts or the Third Breast Identified with Personalities

**Sivagnanam Jeyasankar**
*Senior Lecturer, Department of Fine Arts, Faculty of Arts and Culture*
*Eastern University Sri Lanka*

**Abstract -** Myth of Queen with three breasts, Aadahasouthary of Batticaloa is an element in the history of Batticaloa, Sri Lanka. Her faith is different from Saivism and later she adopted to Saivism because of her new partner Kulakottan, a South Indian prince enter into Eastern Part of Sri Lanka and engaged in constructing a temple for lord Sivan.

Queen aadahasounthary was angry with the intrusion and waged a war against the prince Kulakottan who was engaged in the temple construction without permission.

When the Queen met the prince her third breast was disappeared and she lost her valour and became a "conventional woman" and fell in love with the prince as mentioned to her by a sage.

Queen Aadahasounthary, now without the third breast lost herself and the place she managed once to her new guardian in the guise of a man king, prince kulakottan.

This paper discuss the politics of women body in the gaze of men and the new status of the Queen and the place she managed earlier in the hands of a man as husband as well as ruler.

**Key Words:** Folk Taks, Puranam, Body, Power, Sexuality, Myth, Third breast.

**References**

1. Kankeswari Kandiah, (1965). *Arasanaanaiyum Aadaha Sounthariyum*, Play Script. Batticaloa, Catholic Press, P 60
2. Vansina Jan, (1985). *The Message is a Social Product, Oral Tradition As History,* The University of Wisconsin Press, P- 100
3. Kankeswari Kandiah. (1965). *Arasanaanaiyum Aadaha Sounthariyum*, Play Script. Batticaloa, Catholic Press, P 60
4. Nadarasa, F.X.C. (2000). Maddakalappumanmiyam, Batticaloa, Sri Lanka, District Cultural Council.
5. Ibid P - 34
6. Ibid P - 36
7. Paratha Ammanai
8. Venkadasamy Naddar, N.M. Thiruvilaiyadat Puranam, Madurai Kandam, Thirunelveli, Thirunelveli & Chennai, Saiva Siththantha nootpathippukalaham, Ltd. Page 324,327
9. Ibid P; - 361 – 362,379 - 380.

# மும்முலை ஆடக சவுந்தரி அல்லது ஆளுமைகளை அடையாளப்படுத்தும் மூன்றாவது முலை

***கலாநிதி சி. ஜெயசங்கர்***
முதுநிலை விரிவுரையாளர், நுண்கலைத் துறை
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

***ஆய்வுச்சுருக்கம்***

*ஆடகசவுந்தரி பற்றிய ஐதிகம் கிழக்கிலங்கையின் வரலாற்றுடன் தொடர்புடையதாகக் காணப்படுகிறது. அவரது நம்பிக்கை வைதுலியம் எனும் சைவத்திலிருந்து வேறுபட்டதாக இருக்கிறது. தமிழ்நாட்டிலிருந்து வந்து அனுமதியேதும் இல்லாமல் சிவனுக்குக் கோயில் கட்டும் பணியில் ஈடுபட்டிருக்கும் குளக்கோட்டனைத் தடுத்து நிறுத்தவிரையும் ஆடகசவுந்தரி குளக்கோட்டனைக் காணவும் அவளது மூன்றாவது முலைமறைந்து போய்விடுகிறது. தனக்குரியவனைக் காணும்பொழுது மூன்றாவது முலை மறையும் என்ற முனிவரின் வாக்கைக் கூறி தன்னை அவனுக்கு அர்ப்பணிப்பதுடன் நாட்டையும் அவனுக்கு உடமையாக்கிவிடுகிறாள். ஆண்மைய நோக்கில் பெண் தேகத்தையும் (உடல்) அவள் பொறுப்பிலிருந்து ஆணதுகைகளுக்கு அதிகார மாற்றம் நிகழ்த்திவிடும் ஆடகசவுந்தரி ஐதிகங்கள் பற்றி இக்கட்டுரை ஆராய்கிறது.*

***முக்கியச் சொற்கள்:*** *நாட்டார் கதைகள், புராணம், மும்முலை, தேகம் (உடல்), அதிகாரம், பாலியல்பு, ஐதிகம் (தொன்மம்)*

## ஆடகசவுந்தரி பற்றிய கதைகள்

உன்னரசுகிரி, மட்டக்களப்பு, தெட்சணாபதி (திருகோணமலை) இராச்சியங்களின் அரசி ஆடகசவுந்தரி பற்றிய கர்ணபரம்பரைக் கதைகள் கிழக்கு மாகாணத்தின் பழைய தலைமுறையினரிடம் ஓரளவு புழக்கத்தில் இருந்து வருகிறது. ஆனால் இளையோர் மத்தியில் இக்கர்ண பரம்பரைக் கதைகள் பரிச்சயமானவையாக இல்லை.

தொடர் பாடல்கள் வாய்மொழி வழக்காறுகளில் இருந்தும் மரபுக் கலைகளில் இருந்து நவீனகலைகளுக்கும் மாற்றம் காணும் பொழுதுவிடுதலும் தெரிதலும் நிகழும். இந்த விடுதலும் தெரிதலும் அச்சமூகங்களின் பண்பாட்டு அரசியலை அல்லது அரசியல் பண்பாட்டைப் புலப்படுத்துவதாக இருக்கும்.

"ஒவ்வொரு மரபுரீதியான செய்தியும் குறித்த நோக்குடையதாக இருப்பதுடன் குறிப்பிட்ட தொரு தொழிற்பாட்டை நிறைவு செய்வதாகவும் இருக்கும். அவ்வாறல்லாது போனால் அது இருப்பற்றுப் போய்விடும்" (Vansina Jan 1985)

அந்த வகையில் ஆடகசௌந்தரி பற்றிய கதைகளை ஆய்வுக்குக் கொண்டு வருவதன் மூலம் அதன் கடந்த காலத் தொழிற்பாடு நிகழ்கால நிலைப்பாடு என்பவற்றைப் புரிந்துகொள்ளவும், எதிர்காலத் தேவைகளை சாத்தியப் "பாடுகளைத் தெரிந்து கொள்ளவும் வழிசமைப்பதாக இருக்கும். கிழக்கு மாகாணச் சரித்திரத்தில் ஆடகசவுந்தரி காலம் பொற்காலம் என்றும் நம்பப்படுகிறது. ஆடகசவுந்தரி உன்னரசுகிரியிலிருந்து கொண்டு மட்டக்களப்பு, தெட்சணாபதி தொடக்கம் (திருகோணமலை முதலிய பிரதேசங்கள் அனைத்தையும் கலிபிறந்து 3180, கி.பி 78) ஏறக்குறைய 113 வருடங்கள் வரை ஆட்சிசெய்திருப்பதாக கருதப்படுகிறது.

உன்னரசுகிரியில் அரசு செய்து வந்த ஆடகசவுந்தரி அரசி பற்றியும், அவளது பிரசித்தமான மறு பற்றியும் தென்னிந்தியாவில் இருந்து வந்து திருகோணமலையில் கோணேசர் கோயிலெடுத்து குளந்திருத்தி அரசு செய்து வந்த குளக்கோட்டன் பற்றியும், குளக்கோட்டன் மீது ஆடகசவுந்தரியின் போர்த்தொடுப்புப் பற்றியும், அவிமுர்த்தி (மாமாங்கம் தீர்த்தம்) தீர்த்தத்தில் நீராடி ஆடகசவுந்தரியின் மறு நீங்கியமை பற்றியும், அவரகளது திருமணம் பற்றியும் இக்கதைகள் கூறுகின்றன.

பிறக்கும்பொழுதே முடித்த கூந்தலும் பேரழகு முடையதாய் இருந்த குழந்தை ஆடகசவுந்தரியின் கழுத்தடியில் இருந்த அமங்கலமான பெரிய மறுவொன்று நாட்டுக்குத் துர்ச்சகுனமென்று சோதிடர் கூறிய படியால், மன்னர் குழந்தையைப் பேழையில் வைத்துக் கடலில் விட்டாரென்று ஒருகதை.

இந்த மன்னர், இந்தியாவின் கலிங்க நாட்டின் வடக்கே அசோக்கிரியைத் தலைநகரமாகக் கொண்ட பேரரசர் அசோகசுந்தரர். அவரது மனைவி மனோன்மணிசுந்தரி. இவர்களது மருமகனே குளக்கோட்டன் என்பது மற்றுமொரு தகவல்.

மனுநேயகயவாகுவின் வளர்ப்பு மகள் ஆடகசவுந்தரி என்கிறது வேறொரு தகவல். மிதந்து வந்த பேழையிலிருந்து மனுநேயகயவாகுவால் எடுத்து வளர்க்கப்பட்ட குழந்தையே ஆடகசவுந்தரி.

ஆடகசவுந்தரியின் கழுத்தின் கீழ் இருந்த மறு அவளுடைய நூறு வயதுக்குப் பின்பு இராமச்சந்திர தீர்த்தவிசேடத்தினால் அழியும் என்றும் அதுவரை அவருடைய பேச்சு செயல் யாவும் ஒருவீரனுக்கு உரியவை போன்றே இருக்கும் என்றும் திருமணத்தைப் பற்றியே சிந்திக்கமாட்டார் என்றும் இந்த மறு அழிந்த பின்னரே சிறந்ததோர் ஆடவனை திருமணம் செய்து தனது 117 ஆவது வயதில் ஒருபுத்திரரை பெறுவார் என்றும் முனிவர் கூறியதாக கதை.

முன்முடி, முன்முலை என்று கூறப்படுகின்ற மறு அழிந்த பின்னர்தான் பெண்களுக்குரிய அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற நாற்குணங்கள் இவரிடத்தில் வெளிப்பட்டுத் தோன்றும் என்பதும் முனிவர் கூறியதுதான். இதனை மேலும் விபரிக்குமாறு கங்கேஸ்வரி கந்தையா அவர்களால் ஆக்கப்பட்ட ஆடகசவுந்தரி நாடகப் பனுவலில் வரும் பின்வரும் பாடல் வரிகள் காணப்படுகின்றன.

> **“அவிமுத்திதீர்த்தத்தில் ஆழ்ந்தெழும்பவே**
> **அந்த மறு மாறியதன் மாயமென்னவோ**
> **கவியின்பம் காட்டுமொரு பெண்ணுமாயினாள்**
> **காதல் கொள்ள ஏற்றவொரு மங்கையாகினாள் -**
> **என்ன புதுமை”**

இக்கதைகளுக்கூடாக ஆடகசவுந்தரியின் ஆளுமையையும் ஆளுமையில் ஏற்படும் மாற்றங்களையும் இந்த ஆளுமையுடன் தொடர்புடையதாகக் காணப்படுகின்ற ஆடகசவுந்தரியின் மறு பற்றிச் சிந்திப்பதும் இவற்றின் உருவாக்கங்களுக்கான பின்புலங்களை விளங்கிக்கொள்வதும் புதிய பார்வைகளுக்கு வழிவகுப்பதாக இருக்கும்.

கடந்த காலத்துக்குரிய கட்டுக்கதைகளை அல்லது செவிவழிக் கதைகளை மரபைப் பேணும் நோக்கில் பயன்படுத்துவதில் இருந்து சமகாலச்சிக்கல்களை விளங்கிக் கொள்வதற்கும் வெளிப்படுத்துவதற்கும், விடுவிப்பதற்குமுரிய வளமாகப் பயன்படுத்துவது பற்றிய சிந்தனையில் அல்லது விவாதத்தில் எதிர்கொள்ளப்படும் சிக்கல்களை அல்லது முரண்பாடுகளை விளங்கிக் கொள்வது அவசியமாகின்றது.

அதுவும் அடையாளங்களை பேணியேயாக வேண்டிய எதார்த்தத்தின் நெருக்குதல்களுக்கும்

அடையாளங்களைக் களைந்து கொள்ளல் என்ற சமகால அமெரிக்க, மேற்கைரோப்பிய நவ ஆதிக்கத்திற்கான தயாரிப்புக் கோட்பாடுகளின் திணிப்புகளுக்கும் இடையில் அகப்பட்டு சிந்திக்கத் தூண்டப்பட்டதன் விளைவாக சில தற்புதுமையான கருத்துக்கள் முகிழ்த்தெழுவதும் இயல்பாயிற்று இத்தகையை சூழல் சார்ந்த சிந்தனைப் போக்குகள் வளரத்தெடுக்கப்படுவதும் அவசியமாகின்றது.

இலக்கியத்தில் பொதுவாக அவலப் பாத்திரங்கள் பற்றிக் குறிப்பிடும்பொழுது "நற்பண்பு மிக்க பாத்திரம் நலிவடைதல்" என்று கொள்ளப்படும். சகலவல்லமைகளும் முழு நிறைவும் உடையதாகத் தோன்றும் பாத்திரம் விதிவசத்தாலோ அல்லது தன் தவறாலோகையறு நிலைக்குத்தள்ளப்படும். வானத்துக்கும் பூமிக்கும் இடையில் அப்பாத்திரம் இழப்பதற்கென்று அதனிடத்தில் எதுவுமே எஞ்சியிருக்காது அது "என்பு தோல் போர்த்த உடல்" அவ்வளவுதான். வரலாற்றில் ஆடகசவுந்தரியின் நிலையும் அவ்வாறு தான்.

அரசியானாலும் மரபுரீதியான பெண் பற்றிய படிமங்களுக்குப் பொருந்தும்வகையில் மாறிவரும்பொழுதே அவள் காதலிக்கப்படுவதற்கு உரியவளாக கணிக்கப்பட்டுள்ள கருத்துருவம் நன்கு வெளிப்படுகின்றது. இந்தவகையில் ஆடகசவுந்தரியும் அவல நாயகியாக கணிக்கப்படத்தக்கவள் ஆகின்றாள். குளக்கோட்டனை மணம் முடிக்கும் தறுவாயில் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய நாற்குணங்களும் அல்லது "நற்குணங்களும்" மேற்கிளம்ப மீதி ஆளுமைகள் அத்தனையும் ஆடகசவுந்தரி இழந்திருந்தாள். அவை உதிர்ந்து போயிற்றா? அல்லது உள்ளுறைந்து போயிற்றா? என்பது ஆழ்ந்து கவனிக்கப்பட வேண்டியது.

"ஆடகசவுந்தர புதப்படை உடையவள் இராமகோத்திர முள்ளவள், அந்த அரசியின் பருவம் நூறாண்டுக்கு மேல் இருக்க வேண்டும் இப்போதும் வாலமங்கையாய் இருக்கின்றாள். மணமுறையில்லை. அந்த அரசியோடு போர் செய்து வெற்றியடைய இயலாது நாங்கள் இருவரும் உன்னரசுகிரிக்குச் சென்று அரசியோடு சமாதானம் பெற்று வாழ வேண்டும் மறுப்புரை சொல்லக்கூடாதென்று"

தெட்சணாகிரி நோக்கிய ஆடக சௌந்தரியின் படையனுப்புதலை எதிர்கொள்ள அனுரதன் புரிஅரசனான தத்தீசனைச் சந்தித்தகுளக்கோட்டனை நோக்கி தத்தீசன் கூறியதாக மட்டக்களப்பு மான்மியத்தில் காணக்கிடக்கிறது இது அரசி ஆடக சவுந்தரியின் ஆளுமைச் சிறப்பைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

தத்தீசனுடன் குளக்கோட்டன் உன்னரசுகிரிக்குச் சென்று ஆடகசவுந்தரியைக் கண்டு தங்களுடைய உறவுமுறையைத் தெரிவித்தனர் ஆடகசவுந்தரியும் மன மகிழ்ச்சி கொண்டு தனது சந்ததியார் என்று சிம்மாசனம் விட்டு இறங்கி இருவரையும் ஆசிர்வதித்து அமரச்செய்து மூவருமாகப் பேசிவை தூலியம் என்னும் சைவ சமயத்தைப் பற்றிக் குளக்கோட்டனிடம் கேட்டறிந்து ஆச்சரியமுற்று தானும் அந்தச் சமயத்தில் இருக்கவிரும்பினாள் இந்தச் செயற்பாட்டில் ஆடகசவுந்தரியின் முதல்மந்திரியாரின் பங்கு முக்கியமாக இருப்பதனையும் இது பற்றிய தகவல்களில் இருந்து அறியமுடிகிறது.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஆடகசவுந்தரி கண்ட கனவுகள் பற்றி மட்டக்களப்பு மான்மியத்தில் கூறப்பட்டுள்ளவற்றுள் இக்கட்டுரைக்குத் தேவையான பகுதிகளைப் பார்ப்போம்.

“ஒரு சமயம் ஆடகசவுந்தரிபாங்கிமாருடன் சயனித்திருக்கும் நேரத்தில் ராமமூர்த்தி பிரசன்னராகி அரசிக்கு 120 பருவம் ஆயுள் என்றும் 117 ஆவது பருவத்தில் ஒருபுத்திரனைப் பெறுவாரென்றும் சொல்லி மறைந்தார்”.

பிறிதொரு கனவில், “காசி அவிமுத்தி நீர் கலந்தநதி உன்னுடைய ஆசிரமத்திலிருக்கிறது. அந்த நதியை அறிய வேண்டில் பசும் சேறாயிருக்கும் குஸ்டரோகிகள் ஸ்நானஞ் செய்தால் உடனே நோய் தீர்ந்து போகுமென்று இராமபிரான் கூறி மறைந்தார்”.

அரசியும் அந்நதியைக் கண்டறிந்து அதில் ஸ்நானஞ் செய்ய அவருடைய மூன்றாவது முலை மறைந்து போயிற்றென்றும் அரசியும் பெண்ணியல்பு கொண்டவளாக இருந்தாரென்றும் அன்று முதல் அந்நதியும் மாமாங்கை நதியென பெயர் பூண்டதென்பதும் தகவல்கள். இதனை இப்பொழுது மாமாங்கம் என்று அழைக்கின்றனர்.

இவ்வாறாக புனித தீர்த்தத்தில் நீராடிய ஆடகசவுந்தரியின் மூன்றாவது முலை மறைய, பெண்களுக்கிருக்க முடியாத இயல்புகள் மறைய அரசியார் பெண்களுக்கேயான இயல்புடையவாராக மாறிப்போனார் என்பதை அறியமுடிகிறது.

பெண் ஆளுமையின் “அதீதத்” தன்மையை அவள் திருமணம் முடிக்கும் வரையில் விகாரச் சிறப்பாக ஏற்றுக்கொள்ளும் ஆணாதிக்க நிலைப்பட்ட சமூகப் பார்வை, அவள் திருமண பந்தத்தில் ஈடுபட முற்படும்பொழுது அவளை மரபுரீதியான நாற்குணங்களுடன் அல்லது “நற்குணங்களுடன்” தான் ஏற்றுக்கொள்கிறது.

இதற்காக அவள் “புனித தீர்த்தங்களில்” மூழ்க வேண்டியிருக்கிறது அல்லது சுய ஆளுமைகளை உள்ளுறைய வைக்க வேண்டியிருக்கிறது. அவ்வாறு அல்லாதவர்கள் ஆண் தன்மை கொண்டவர்களாகவே அழைக்கப்படுகிறார்கள். “ஆண் மூச்சுக்காறியள்” என்ற பேச்சுவழக்கிலுள்ள சொற்பிரயோகம் இதனை நன்குவெளிப்படுத்தும்.

மேலும் குடும்ப இயக்கத்தினை வீட்டின் அகத்தும், புறத்தும் நிகழ்த்துபவர்களாக பெண்கள் விளங்குகின்றபொழுது அக் குடும்பத்தை “பெண் மூச்சுக் கொண்ட குடும்பம்” என்று அழைப்பதும், “பெண் மூச்சுக் கொண்ட குடும்பம் உய்யாது” என்ற பேச்சுவழக்கிலுள்ள மரபுத் தொடர் சுட்டி நிற்பதும் கவனத்திற் கொள்ளத்தக்கது.

## தமிழர் மரபில் மூன்றாவது முலை பற்றிய கதைகள்

மூன்றாவது முலை அல்லது மும்முலை பற்றிய தகவல்கள் தமிழரது சமூக வரலாற்றில் இதுதவிர, வேறுபல இடங்களில் வருவதும் அவதானிக்கத்தக்கது.

அதில் ஒன்று, பாரத இதிகாசத்தில் இடும்பன், இடும்பிகதையில் வீமனைச் சந்திக்கும் வேளையில் இடும்பியின் மூன்றாவது முலை மறைகிறது. மற்றையது, திருவிளையாடற் புராணத்தில் தடாதகைப் பிராட்டியார் பரமசிவனைச் சந்திக்கும்வேளையில் மூன்றாவது முலை மறைகிறது. இடும்பியின் நிலையினை பாரத அம்மானை கீழ்க்கண்டவாறு சித்திரிக்கின்றது.

**“வேளுக்குஒப்பாம் இடும்பன் மிக்
கதங்கையைப் பார்த்து
இங்கேமனிதர் இயக்கம் போற் காணுகுது
அங்கேநீயும் ஆராய்ந்துவா எனவே
சென்றாளவளுந் திறமாக அவ்வனத்தே
கண்டாள் அவள் தானுங்கருத்துடைய
வீமனைத் தான்
அங்கவட்கு மூன்று முலையாய் இருப்ப
நாள்தோறும்**

*மங்கை சிவனை நோக்கி வருந்திக் தவசிநிற்க*
*ஈசுரனார் தோன்றி உனக்கு என்னவரம் வேணுமென்றார்*
*நேசமுடன் வாணுதலா இரண்டு முலை.*
*கிங்கெனக்குத் தாருமெனயீசுரனாரப் பொழுது*
*உன்கணவனைக் கன்டாலுனக்கு இரண்டு முலையாமெனவே*
*அன்பாய் வரங்கொடுத்தாரரனாருமப்பொழுது*
*அப்படியேதான் அருள்வீமசேனரைத்தான்*
*வந்துதான் கண்டவுடன் மானார்க் கிரண்டுமுலை*
*சிறந்திருக்கக்கண்டு செய்யிளைவுமப் பொழுது*
*அறிந்துதன்பத்தாவிவர்தாமெனவறிந்து*
*என் சொருபத்தானுமெனக்கிப்போ பளபளென*
*அன்பான லெட்சுமி போலாக நான் வேணுமென்ன*
*அக்கணந்தன்னழலரன் மாதுதான் தோன்றி*
*தான் மகிழ்ந்து புமாதுதையலுக்கவ் வரமீந்து*
*கமலவல்லி என்று சொல்லி காரிகைக்*
*கைக்கு நாமமிட்டுப் போனாளே"*
*(பாரத அம்மானை)*

தடாதகை பிராட்டியாரின் நிலையை திருவிளையாடற்புராணம் (தடாதகைப் பிராட்டியார் திருவவதாரப் படலம்) கீழ்க் கண்டவாறு சித்தரிக்கின்றது

*"மகவின்றிபல பகல்யான் வருந்தியருந் தவம்புரிந்தேன் மைந்தற் பேறு*
*தகவிந்தமகஞ் செய்தேனதுவுமொரு பெண்மகவைத் தந்ததந்தோ*
*முகவிந்து நிலவொழுகவரு பெண்ணுமுலை மூன்றாய் முகிழ்ந்துமாற்றார்*
*நகவந்த தென்னேயோவென்று வகையிலனாகிநலியுமெல்லை."*

*"தெள்ளமுதமென்மழலைசிந்தவிள மூரல்*
*முன்னெயிறரும்பமுலை மூன்றுடையதோர்பெண்*
*பிள்ளையென மூவொருபிராயமொடுநின்றாள்*
*எள்ளரியபல்லுயிருமெவ்வுலகுமீன்றாள்"*
*(திருவிளையாடற் புராணம்*
*- தடாதகைப் பிராட்டியார்*
*திருவவாதரப்' பாடல்)*

இவ்வாறாக பிறப்பெடுத்து வளர்ந்த தடாதகைப் பிராட்டியாரிடம் திருமணம் பற்றிய பேச்செடுத்தபொழுது.

*"அன்னை நீநினைந்த வெண்ணமாம் பொழுதாகும் வேறு*
*பின்னைநீயிரங்கல் யான்போய்த் திசைகளும் பெருநீர் வைப்பும்*
*என்னதுகொற்றநாட்டிமீள்வலிங் கிருத் தியென்னாப்*
*பொன்னளிர் மலர்கொம் யன்னாள் பொருக்கெனவெழுந்துபோனாள்."*

*"தேம்பரிகோதைமாதின் றிருவுளச் செய்திநோக்கி*
*ஆம்பரிசுணர்ந்த வேந்தரமைச்சரும் பிறரும் போந்தார்*
*வாம்பரிகடாவித் திண்டேர் வலவனுங் கொணர்ந்தான் வையந்*
*தாம்பரிவகலவந்தாளேறினாள் ச ங்கமார்ப்ப."*

*"ஆர்த்தனதடாரி பேரியார்த்தன முருகு மொந்தை*
*ஆர்த்தனவுடுக்கைதக்கை யார்த்தன படகம் பம்பை*
*ஆர்த்தனமுழவந் தட்டையார்த்தன சின்னந் தாரை*
*ஆர்த்தனகாளந் தாளஆர்த்தன திசை களெங்கும்."*

*"மேவியாகவப் பாரிடைப் பாரிட வீரரையமராடி*
*ஒவிலாவலி கவர்ந்ததுமன்றி னியுருத்தெவ ரெதிர்ந்தாலுந்*
*தாவிலாவலிகவரவு மடங்கலின் றனிப்பிணாவெனநிற்குந்*
*தேவியார்திருவுருவமுஞ் சேவகச் செய்கையுமெதிர்கண்டாள்."*

*"ஒற்றைவார்கழற் சரணமும் பாம்பசைத்*
*துடுத்தவெம் புலித்தோலுங் கொற்றவாண்*

**“மழுக் கரமும்வெண் ணீறணிகோலமுந் நூன்மார்புங்
கற்றைவேணியுந் தன்னையே நோக்கிய கருணைசெய் திருநோக்கும்
பெற்றதன்வலப் பாதியைத் தடாதகைப் பிராட்டியுமெதிர்கண்டாள்.”**

**“கண்டவெல்வையிலொரு முலை மறைந்தது கருத்தினாண் மடனச்சங்
கொண்டமைந்திடக் குனிதரமலர்ந்த புங் கொம்பரினொசிந்தொல்கிப்
பண்டையன்புவந் திறைகொளக் கருங்குழற் பாரமும் பிடர்தாழக்
கெண்டையுண்கணும் புறவடிநோக்கமண் கிளைத்துமின் னெனநின்றாள்”**

**(திருவிளையாடற்புராணம் - திருமணப்படலம் )**

மேற்படி மூன்று சந்தர்ப்பங்களிலும் ஆணுக்கு ஒப்பான ஆளுகையுடன் மும்முலையுடன் அல்லது மூன்றாவது முலையுடன் கூடியவளாக சித்திரிக்கப்படுகின்ற பெண்கள் அவர்களுக்குப் பொருத்தமானவர்கள் என்று சொல்லப்படுகின்றவர்களைக் கண்ணுற்ற கணங்களில் மூன்றாவது முலையின் மறைவையும் மரபுவழியாகச் சித்தரிக்கப்பட்டு வருகின்ற பெண் இயல்புகளான அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்பவற்றின் வெளிப்பாட்டையும் அவதானிக்க முடிகிறது.

## மூன்றாவது முலையும் ஆண்மைத் தன்மையும்

இம்மூன்று சந்தர்ப்பங்களிலும் பெண் என்பவள் மனிதப் பிறவியாக இருந்தாலென்ன அரக்கியாக இருந்தாலென்ன கடவுளாகத் தான் இருந்தாலென்ன மூன்றாவது முலையின் மறைவுடன் ஆண் ஆளுமைகளின் நிழலில் வாழ்பவர்கள் ஆகவே பார்க்கப்பட்டிருக்கின்றனர்.

பொருத்தமான ஆண் இல்லாத இடத்தில் அந்த இடத்தை நிரப்ப ஆளுமை மிக்க பெண் தேவைப்படுகின்றாள். பொருத்தமான ஆண் வாய்க்கப் பெற்றதும் பெண் மரபுரீதியான “இயல்பு” வாழ்க்கைக்கே தள்ளப்பட்டு விடுவதையும் இங்கு அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

யதார்த்த வாழ்க்கையில் ஆளுமை மிக்கவர்களாகக் காணப்பட்ட பெண்கள் பற்றிய தகவல்கள் கதைகள் கட்டுக் கதைகள் ஐதீகங்கள் புராணங்கள் இதிகாசங்கள் வரலாறுகள் எனத் தலைமுறை தலைமுறையாகக் கடத்தப்படும் பொழுது ஆண் நிலைப்பட்ட சமூகத்தில் இந்தப் படைப்பாக்கம் நிகழும் பொழுது அது ஆணாதிக்கக் கருத்தியலை வற்புறுத்துவதாகவே இருக்கும்.

இங்கு எடுத்துக் கையாளப்படுகின்ற மூன்று சந்தர்ப்பங்களிலும் மூன்றாவது முலைமறையும் கணத்திலேயே அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய நாற்குணங்களும் தோன்றுகின்றன மேலும் மூன்றாவது முலையுடைய பெண் ஆண்மைக் குணங்களை உடையவளாக இருக்கிறாள் மூன்றாவது முலைமறைந்தவளே பெண் குணங்களை உடையவளாக இருக்கிறாள் என்பதாகவே சித்திரிப்புகள் அமைந்திருக்கின்றன.

இந்தநிலையில் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு மற்றும் ஆண்மை பெண்மை என்ற கருத்துருவாக்கங்களின் சூத்திரதாரிகளே மூன்றாவது முலையின் உருவாக்கத்திற்கும் சூத்திரதாரிகளாக இருந்திருக்கிறார்கள் என்பதை விளங்கிக் கொள்ள முடிகிறது.

மேலும் ஒருபிடி மண்ணிலிருந்து மனிதர் படைக்கப்படுவதாகவும் நம்பிக்கையுள்ளது. இந்தப் பிடிமண்ணில் மிஞ்சியவை உடலில் புறவளரிகளாகக் காணப்படுவதாகவும் நம்பப்படுகின்றது. இப்புற வளரிகள் கிராமிய வழக்கில் “மிச்சமண்” என்றழைக்கப்படுகின்றது. ஆடகசவுந்தரியின் மூன்றாவது முலையும் “மிச்சமண்ணாகக்” கருதப்பட்டால் இவ்வாறான புறவளரிகள் உள்ளவர்களின் உயிரியல் சார்ந்த விளக்கங்களையும்

உளவியல் சார்ந்த வியாக்கியானங்களையும் கவனத்திற் கொள்வது அவசியமானதாகும். இங்கு உயிரியல் சார்ந்த விளக்கங்களும் உளவியல் சார்ந்த வியாக்கியானங்களும் ஆண்நிலைப்பட்ட கருத்தியல்களைக் கொண்டிருப்பின் அவையும் கேள்விக்குட்படுத்தப்பட வேண்டியவையே. ஏனெனில் ஆண் பற்றியதும் பெண் பற்றியதுமான ஆதிக்க நிலையிலுள்ள கருத்துருவங்கள் வரலாற்றோட்டத்தில் ஆதிக்க நிலையை எடுத்துக்கொண்ட ஆண்களது உருவாக்கங்களேயன்றி சுயாதீனமான வளர்ச்சிப் போக்கன்று.

ஒருபிடி மண்ணிலிருந்து மனிதர் படைக்கப்படுவது பற்றிய நம்பிக்கையுடனும் உலகில் பெண்களது அவல வாழ்க்கையுடனும் தொடர்புடையதான “பெண்ணாய்ப் பிறப்பதை விட ஒரு பிடி மண்ணாய்ப் பிறக்கலாம்” என்ற பேச்சு வழக்குக் காணப்படுவதும் கவனத்திற்குரியது.

ஆண்நிலைப்பட்ட கருத்துருவாக்கங்களும் அவை வடிவமைத்திருக்கின்ற வாழ்க்கை முறைகளும் இப்பொழுது கேள்விக்குள்ளாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவையுங் கூட சூழல் சார்ந்ததாகவும் சூழலுக்கு அந்நியமானதுமான தளங்களில் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இந்த முரண்பாடுகள் களையப்பட்டு ஆடகசவுந்தரி பற்றிய புதிய பார்வையில் தேவை அவசியமானதாக உணரப்படுகிறது. தமிழ்ப் பண்பாட்டு வரலாற்றில் மூன்றாவது கண் ஞானத்தின் குறியீடாகக் கொள்ளப்படுகின்றது. மூன்றாவது கண்ணின் திறப்பு அறிவின் வெளிப்பாடாகக் கருதப்படுகின்றது. இது பிரபல்யம் மிக்கதாகவும் விளங்குகின்றது. ஐதீகங்கள், கட்டுக் கதைகள், புராணங்கள், இதிகாசங்கள் என்பன இவற்றிற்கு ஆதாரங்களாக அமைகின்றன.

இதனைப் போலவே மூன்றாவது முலை பற்றியும் ஐதீகங்கள், கட்டுக்கதைகள், புராணங்கள், இதிகாசங்கள் என்பவற்றில் காணமுடிகின்றது. ஆனால் அது பிரபல்யம் பெற்றதாக இல்லை. மாறாக மூன்றாவது முலையின் இருப்பு அசாதாரணமானதாகவே சித்திரிக்கப்படுகின்றது.

இங்கு ஒரு விடயத்தைக் கவனிக்க முடியும். அதாவது ஐதீகங்கள், கட்டுக் கதைகள், புராணங்கள், இதிகாசங்கள் என்பவற்றில் மூன்றாவது கண் பற்றிய தகவல்கள் ஆண் சார்ந்ததாகவும் மூன்றாவது முலை பற்றிய தகவல்கள் பெண் சார்ந்ததாகவும் இருக்கின்றன.

இந்த இரு வேறுபட்ட நிலை காரணமாகவே ஆணாதிக்கமுடையதாக இயங்கி வந்திருக்கின்ற சமூகத்தில் ஆண் சார்ந்த மூன்றாவது கண் அறிவின் வெளிப்பாடாக உன்னதமாகவும் ஆளுமையின் வெளிப்பாடான பெண் சார்ந்த மூன்றாவதுமுலை அசாதாரணமானதாகவும் கொள்ளப்பட்டிருக்கின்றது.

உண்மையில் மூன்றாவது முலை என்பது ஆணாதிக்க சமூகத்தில் ஆளுமைகள் உள்ளுறைய வைக்கப்பட்டு அதுவே இயல்பானதென்று வாழவிடப்பட்டிருக்கும் பெண்களது உள்ளுறை ஆற்றல்களின் வெளிப்பாடுகளின் குறியீடாகவே கருதமுடியும். இவ்வாறாக அடக்குமுறைக்குள்ளாகும் அடையாளங்கள் கேள்விக்குள்ளாகும் ஒரு சமூகத்தின் பண்பாட்டு அடையாளத்தை நிலைநிறுத்துவதனூடாக தேசிய அடையாளத்தை உறுதிப்படுத்துவது பற்றிய சிந்தனையில் மரபுரீதியானதளைகளை இனங்காணுதலும் தளை நீக்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தலும் குறிப்பிட்ட அந்தச் சமூகத்தில் அகவயமானதொரு கடமையாகும். இதன்போது மரபுரீதியான கருத்தியல்கள் கேள்விக்குள்ளாக்கப்பட்டு புதிய பரிமாணத்தைப் பெற்றுக்கொள்ளும். இந்தவகையிலேயே பொதுவாக ஈழத்தமிழரதும் குறிப்பாகக் கிழக்கு மாகாணத் தமிழரதும் பண்பாட்டு அடையாளத்தை வலுவாகப்

பிரதிநிதித்துவப்படுத்தக் கூடியதொரு பண்பாட்டுக் கூறாக ஆடகசவுந்தரி வரலாறு இருப்பதன் காரணமாகவே அதன் புதிய பரிமாணம் பற்றிய கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

## நிறைவாக

ஏலவே சொல்லப்பட்ட கதைகளின்படி ஆடகசவுந்தரியானவள் போரில் வெல்லப்பட முடியாத ஆளுமையாகக் காணப்படுகிறாள். அவளிடம் எத்தகைய வேலைகளையும் செய்து முடிக்கும் திறன்கொண்ட பூதப்படைகள் காணப்படுகின்றன. அவள் வைதூலியம் என்னும் சைவத்திற்கு மாறுவதாகக் கூறப்படுகின்றது. அப்படியானால் ஆடகசவுந்தரியினதும் அவளது பிரதேசங்களது மக்களதும் நம்பிக்கை எதுவாக இருக்கும்? இன்றும் பெருமலிமையுடன் காணப்படும் கிராம அல்லது உள்ளூர் அல்லது குலதெய்வங்களுக்கான நம்பிக்கை சார்ந்ததாக அது இருந்திருப்பது சாத்தியமானது.

இச்சடங்குகள் இயற்கையுடன் இணைந்த வாழ்வுகொண்ட மனிதரைக் காணுபவை. அவர்களது தேவாதிகள் குலமுன்னோர்களாகவே காணப்படுகின்றனர். இவ்வுலகில் வாழ்பவர்களும் இவ்வுலகு நீங்கி மறுவுலகில் வாழ்பவர்களும் சடங்குகள் வழி தேவாதிகள் ஊடாக ஊடாடுபவராகக் காணப்படுகின்றனர். ஆறுதலும் ஆற்றுப்படுத்தலும் இவ்வாறாக அடைந்துகொள்கிறார்கள். ஆடுதல், பாடுதல், கொண்டாடுதல் மூலமாகத் தமது வாழ்வையும் வரலாறுகளையும் பார்வைக்கும், மீள்பார்வைக்கும் கொண்டுவருவதன் மூலமாக சமகாலத்தைத் தீர்மானித்துக் கொள்கிறார்கள்.

பெண் தலைமைத்துவத்துடனும் மேற்காணும் நம்பிக்கைகளுடனும் கூடிய வாழ்வு பழங்குடிச் சமூகங்களது பண்புகளை ஒத்ததாக இருப்பதைக் காணமுடிகிறது. அதாவது சூழலைச் சுரண்டாத சூழலுடன் ஒத்திசைந்த வாழ்வு பழங்குடிச்சமூகத்தவரது உலகநோக்கு இதுவாகத் தான் இருக்கிறது. பகுத்துண்டு பல்லுயிரோம்புதல் என்ற தமிழ்ப்பண்பாட்டு மரபுகளுடன் தொடர்புடைய உலகநோக்காகக் காணமுடிகிறது. எனவே ஆடகசௌந்தரி பற்றிய அறிதலும் புரிதலும் மீளுருவாக்கமும் பெண்ணிலைவாத நோக்குடனும் பழங்குடி உலகநோக்குடனும் ஒன்றிணைந்த பகுத்துண்டு பல்லுயிரோம்பும் பண்பாட்டு மரபுடனும் மேலெழும்புவதாக இருப்பது ஆக்கபுர்வமான உலகிருப்பிற்கும் பங்களிப்புச் செய்வதாக இருக்கும்.

## அடிக்குறிப்புகள்


1. கங்கேஸ்வரிகந்தையா. (1965). *அரசன் ஆணையும் ஆடகசௌந்தரியும்*, நாடக எழுத்துப்பனுவல், ப - 60.
2. Vansina Jan. (1985). *The Message is a Social Product, Oral Tradition As History*. The University of Wisconsin Press, P- 100
3. கங்கேஸ்வரிகந்தையா. (1965). *அரசன் ஆணையும் ஆடகசௌந்தரியும்*, நாடக எழுத்துப்பனுவல், ப - 60.
4. நடராசா. எப், எக்ஸ், ஸி. (2000). *மட்டகளப்பு மான்மியம்*, மட்டகளப்பு மாவட்ட கலாசாரப் பேரவை. பக் - 32, 33
5. மேலது ப - 34
6. எை மேலது ப - 36
7. பாரத அம்மானை
8. வேங்கடசாமிநாட்டார், ந.மு. (1927). ஜனவரி, *திருவிளையாடற் புராணம் மதுரைக் காண்டம்*.
9. திருநெல்வேலி, தென்னிந்தியசைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடட், திருநெல்வேலி சென்னை. பக் - 324, 327
10. மேலது பக் - 361 - 362, 379 - 380